சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி–கருணை அடிப்படையில் பணி நியமனம்– திருமதி மா.செல்வி, க/பெ. காலஞ்சென்ற திரு. எ.நாகராஜன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.28

நாள் : 21.05.2020
சார்வரி, வைகாசி : 8
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை கடிதம் எண். அ2/7259/2019, நாள் 26.08.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மதுரை மண்டல கட்டுப்பாட்டில் உள்ள திருநெல்வேலி, தாமிரபரணி வடிநில வட்ட அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.எ.நாகராஜன் என்பவர் பணியிலிருக்கும்போது 24.12.2012 அன்று காலமானதைத் தொடர்ந்து அவரின் வாரிசுதாரர் / மனைவியான திருமதி.மா.செல்வி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வழங்கிட கோரியதை அடுத்து முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் கருணை அடிப்படையில் தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவி அளிக்கப்பட்டு, அவர் 29.11.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பிறந்த நாள் 15.06.1976 என்றும், இடைநிலைக் கல்வியை ஏப்ரல் 1993–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 29.11.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திருமதி மா.செல்வி, இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 29.11.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, அ.சா. எண்.3180/க்யூ2/2020–1, நாள். 11.05.2020 (ம) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அ.சா.எண்.11645/ஜி2/2020, நாள் 18.05.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை–20.
திருமதி மா.செல்வி, இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம்,
மதுரை–2 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை / பணியாளர் மற்றும்
நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

27.05.2020
பிரிவு அலுவலர்

27-5-20

செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து., தாமிரபரணி வடிநில கோட்டம்,
திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : பொறி.தா.அண்ணாதுரை, பி.இ.,
செயற்பொறியாளர்,நீ.ஆ.து/பொ.ப.து.,

**செ.மு.ஆ.எண்.நி1/ 1439 / 18 (551/2020) நாள்:24.06.2020**

பொருள் : பணியமைப்பு — நீர்வள ஆதாரத்துறை — தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி — திருமதி.மா.செல்வி, இளநிலை உதவியாளர் (பிறந்த தேதி : 15.06.1976) பணிவரன்முறை செய்யப்பட்டது — தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1. முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்:எஸ்.3(4)/21591/2014 நாள்:09.11.2018
2. அரசாணை (3ப)எண்:28, பொதுப்பணி(பி1) துறை, நாள்:21.05.2020

*********

பார்வை (1)-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.மா.செல்வி, அவர்தம் பதவியில் பார்வை (2)-ல் காணும் அரசாணையின் வாயிலாக 29.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து அன்னாரது பணி தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 28-ன் படி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

எனவே, தனியர் 29.11.2018 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதியில் தகுதிகாண் பருவம் துவங்கியதாக கருதப்படுவார். இவர் மூன்றாண்டு தொடர் பணியில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திட ஆணையிடப்படுகிறது.

மேலும் அன்னார் தகுதிகாண் பருவ காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

24/06/20

செயற்பொறியாளர், பொ.ப.து/நீ.ஆ.து
தாமிரபரணி வடிநில கோட்டம், திருநெல்வேலி — 2

1/2

பெறுநர்
திருமதி.மா.செல்வி,
இளநிலை உதவியாளர்,
கோட்ட அலுவலகம்

24/6/20